**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 45/2020**

வாக்குமூலம்: வா.சா.1 – கதிரேசன்

**17.02.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** 23.09.1985 பாகப்பிரிவினை ஆவணமான வா.சா.ஆ.1 ல் எனது தந்தையின் சித்தப்பாவும் தான் தரப்பினர் என்றாலும் நான் அதில் தரப்பினர் இல்லை என்றாலும் அதனால் மேற்படி ஆவணத்தைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். 23.09.1985 பாகப்பிரிவினை ஆவணத்தில் எனது தந்தைக்கும், சித்தப்பாவுக்கும் பி ஜாபிதா சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்குப் பிறகு 30.6.1999 ஆம் தேதியிட்ட வா.சா.ஆ.2 ஆவணம் பாகப்பிரிவினை ஆவணம் படி எனது தந்தையின் சித்தப்பாவும் பாகப் பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன்படி என் தகப்பனாருக்கு ஏ ஜாபிதா சொத்தும், என் சித்தப்பாவிற்கு பி ஜாபிதா சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தான் வழக்குப் பாதை உள்ளது என்றாலும், எனது சித்தப்பா சொத்திற்கு வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.1ன் படி 1ஆம் பிரதிவாதிக்கு ஏ ஜாபிதா சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றாலும், சி ஜாபிதா நாச்சிமுத்து கவுண்டருக்கும், டி ஜாபிதா சொத்துக்கள் கந்தசாமி கவுண்டர் மகன் கவுண்டருக்கும், இ ஜாபிதா சொத்துக்கள் கந்தசாமி கவுண்டர் மகன் நாச்சிமுத்து கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். இ ஜாபிதா சொத்துக்கள் கிடைக்கப் பெற்ற நாச்சிமுத்துகவுண்டருக்கு முருகேசன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர் மக்கள் என்றால் சரிதான். மேற்படி முருகேசன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர் இறந்து விட்டார்கள். இவ்வழக்கில் முருகேசன் அவர்களின் வாரிசுகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். பழனிச்சாமிக்கு வேறு சொத்துக்கள் சேர்க்கப்பட்டதால் அவர்களை வாரிசுகள் சேர்க்கவில்லை. என் உடன் பிறந்தவர் ஈஸ்வரன் என்றால் சரிதான். எனக்கும், ஈஸ்வரன் அவர்களுக்கும் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் பழனிச்சாமி கவுண்டர் 1999ஆம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு நானும், ஈஸ்வரன் தான் வாரிசுகள் என்றால்

சரிதான். என் சகோதரன் ஈஸ்வரனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2. தாவா சொத்தில் பாதைக்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் சொத்து விபரம் 1985 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட பி ஜாபிதா 2 லக்க சொத்து சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். நான் பாதை கேட்டு போட்டுள்ள சொத்தின்சர்வே எண் தற்போது என்ன என்பது எனக்குத் தெரியாது. சர்வே எண்.62 ல் தான் பாதை உள்ளது அதில் மொத்தப் பரப்பு ஏக்கர் 8.58 செண்ட் என்றால் சரிதான். அதில் என் தகப்பனாருக்கு சர்வே எண்ணில் ஏக்கர் 1.87 செண்ட் என்றாலும், மேற்படி சர்வே எண்.62/3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது சொத்து விபரத்தில் கிழக்கு நான்குமால் என்ன என்றால் கிழக்கு வழக்குச் சம்பந்தப்பட்ட பொதுப்பாதை உள்ளது. நான் தாக்கல் செய்த பிராது சொத்து விபரத்தில் கிழக்கு நான்குமாலாக 8 அடி அகல பொதுப்பாதையும், நாச்சிமுத்து கவுண்டர், சுப்பையகவுண்டர் வகையறா புஞ்சை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் கிழக்கு நான்குமாலாக விவசாயம் இருந்தாலும், இல்லாதிருந்தாலும் நம் பாகஸ்தர் 4 பேர்களுக்கு நம்மால் ஏற்படுத்தப்பட்ட 8 அடி அகலம் உள்ள பாதையும், நாச்சிமுத்து கவுண்டர், சுப்பையாகவுண்டர் புஞ்சை என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் தாக்கல் செய்த பிராதில் சொத்து விபரத்தில் மேற்படி கிழக்கு நான்குமாலாக விவசாயம் இருந்தாலும், இல்லாதிருந்தாலும் என்று வாசகத்தை மறைத்துவிட்டு 8 அடி பொதுப்பாதை என்று மட்டும் போட்டுள்ளேன் என்றால் சரிதான். பிராது சொத்து விபரத்தில் ஒரு ஏக்கர் 1.87 செண்டிற்கு மட்டும் தான் உள்ள நான்குமால் தனியாக குறிப்பிட்டும், பாதைக்கு மட்டும் ஒரு நான்கு மால் குறிப்பிட்டுள்ளளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1ல் பிராது சொத்து விபரத்தில் உள்ளது போல் பாதைக்கு மட்டும் ஒரு நான்கு மால் குறிப்பிடவில்லை என்றால் பத்திரத்தில் உள்ளது. நான் கூறுவது போல் பத்திரத்தில் பாதைக்கு என்று தனியாக நான்கு மால் குறிப்பிடவில்லை என்றாலும், நான் இவ்வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. வா.சா.ஆ.1ல் சர்வே எண்.62ல் மொத்த ஏக்கர் 9.58ல் ஏ ஜாபிதா சொத்தாக 2 ஏக்கர் 74 செண்டும், பி ஜாபிதா சொத்தாக 1 ஏக்கர் 87 செண்டும், டி ஜாபிதா சொத்தாக 2 ஏக்கர் 22– 1/2 செண்டும், இ ஜாபிதா சொத்தாக 2 ஏக்கர் 75 செண்டு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். குப்பமுத்துகவுண்டர் மகன் நாச்சிமுத்துகவுண்டருக்கு சி ஜாபிதா சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சி ஜாபிதா சொத்துக்களில்

மேற்படி நாச்சிமுத்து கவுண்டருக்கு சர்வே எண்62ல் எந்த பகுதியும் ஒதுக்கப்படவில்லை என்றால் எனக்குத் தெரியாது. ஏ, பி, டி, இ ஜாபிதா சொத்துக்களில் சர்வே எண்.62ல் மொத்தம் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் ஏக்கர் 9.58 –1/2 என்றால் சரிதான். ஆனால் சர்வே 62ல் மொத்த பரப்பானது ஏக்கர் 9.58 மட்டும் தான் என்றாலும் ½ செண்ட் அதிகமாக பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.62ல் ஏ, பி, டி, இ பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் புஞ்சை நிலம் என்று தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. தாவா பாதை ஏ, பி, டி, இ பாகஸ்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட புஞ்சை நிலத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.1ல் சர்வே எண்.62ல் ஏ, பி, டி, இ பாகஸ்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாதையின் பரப்பு தனியாக கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா பாதை என்பது ஏ, பி, டி, இ பாகஸ்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட புஞ்சை நிலத்தின் ஒரு பகுதியே தவிர பொதுப் பாதை அல்ல என்றால் சரியல்ல. 4 பேருக்கும் பொதுப்பாதை என்று தான் குறிப்பிட்டுள்ளது. ஒரு சொத்தை ஒருவருக்கு ஒதுக்கி அதன் வழியாக செல்வது புழக்க உரிமையாக போய் வருவதற்கு இருக்குமே தவிர பொதுப்பாதை ஆகாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் ஏ ஜாபிதா சொத்தில் 2லக்க சொத்தாக இந்த பாதையைப் பற்றி மேற்கு நான்குமாலில் சின்ன நாச்சிமுத்துநாயக்கர் வகையறா புஞ்சையும், நம் பாகஸ்தர்களுக்கு விவசாயம் செய்திருந்தாலும், செய்யாதிருந்தாலும் 8 அடி அகலத்தில் வண்டி மாடுகள் ஓட்டிக்கொள்ளும் பாதையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதே போல் தான் என் தகப்பனார் வகையறாவுக்கு ஒதுக்கப்பட்ட பி ஜாபிதா சொத்துக்களில் சர்வே எண்62 ல் ஏக்கர் 9.58 ல் 2 லக்க சொத்தில் ஒதுக்கப்ட்ட 1 ஏக்கர் 58 செண்டில் கிழக்கு நான்குமாலாக விவசாயம் இருந்தாலும், இல்லாதிருந்தாலும் நம் பாகஸ்தர்களுக்கு 8 அடி பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதே போல் தால் டி, இ ஜாபிதா சொத்துக்களில் சர்வே எண்.62ல் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பரப்பிற்குள் பயிர் செய்திருந்தாலும், செய்யாதிருந்தாலும் தேவைப்படும் போது 8 அடி அகலத்தில் வண்டி, மாடு ஆகியவைகள் ஓட்டிக் கொள்ளும் பாதை என்று ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

5. வா.சா.ஆ.1ல் பாகஸ்தர்களுக்கு 8 அடி அகலத்தில் தான் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எனது பிராதில் வண்டி வாகனங்கள் செல்லக்கூடிய 12 அடி பாதை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 12 அடி பாதை வேண்டும் என்று பாகஸ்தர்களிடம் நான் கேட்டுக்கொண்டேன். மேற்படி 12 அடி பாதைக்கு மற்ற 3 பாகஸ்தர்கள் ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. பாகவிஸ்தி பத்திரத்தில் பாகம் ஒதுக்கப்பட்ட 4 பங்குதாரார்களும்

அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட முழுப்பரப்பிலும், விவசாயம் செய்து கொள்ளலாம் என்று உரிமை அளிக்கப்பட்ட நிலையில் பாதை அமைந்துள்ள பகுதியில் 1ஆம் பிரதிவாதி உள்ளிட்ட மற்ற பங்குதாரர்கள் அதில் பயிர் செய்யக்கூடாதென ஆட்சேபனை செய்ய உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் என் தகப்பனாரும், சித்தப்பாவும் சேர்ந்து பாதை செல்லும் பகுதியிலும் பயிர் செய்து கொள்ளலாம் என்றும், பயிர் செய்தாலும் மேற்படி பாதையில் வண்டி மாடுகள் செல்லலாம் என்று கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றாலும் நான் தற்போது அதை ஆட்சேபனை செய்கிறேன் என்றாலும் சரிதான். 4 பேருக்கும் பொதுப் பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஒருவர் மட்டுமே 8 அடி பாதையில் பயிர் செய்து வருகிறார். மேற்படி தடம் இல்லாதது போல் விவசாயம் செய்து வருகிறார். வா.சா.ஆ.1ல் சர்வே எண்.62ல் ஒதுக்கப்பட்ட பாதை புழக்க உரிமை பாதையே தவிர பொதுப் பாதை இல்லை என்றால் சரியல்ல. பொதுப்பாதை தான். அ பரிகாரத்தில் 12 அடி அகல பொதுப்பாதை என்று கோரியுள்ளது வா.சா.ஆ.1 ற்கு எதிரானது என்றால் 12 அடி பொதுப்பாதை என்று நானாக கேட்கவில்லை 4 பேர்களும் சேர்ந்து பேசி முடிவெடுத்து தான் 12 அடி பொதுப் பாதை என்று கோரினேன். ஆ பரிகாரத்தைப் பொறுத்து 8 அடி அகலத்தில் மாட்டு வண்டியைத் தவிர டிராக்டர், டெம்போ, லாரி போக முடியாது என்றால் சரிதான். அதனால் ஆ பரிகாரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதே போல் வா.சா.ஆ.1ல் பாதை உள்ள பகுதியில் விவசாயம் செய்ய வேண்டும் என்றால் உழுது தான் செய்ய வேண்டும் என்றும், ஆகவே உழவு செய்யக் கூடாது என்றும், விவசாயம் செய்யக் கூடாது என்றும் தடை உத்தரவு கேட்பது சரியல்ல என்றால் வண்டி வாகனம் செல்லும் இடத்தில் வேண்டுமென்றே மோட்டார் வைத்து உழுது வருகிறார்கள் எங்களால் மேற்படி பாதையில் சென்று வர இயலவில்லை. வா.சா.ஆ.1ல் ஏ ஜாபிதா 2 லக்க சொத்தாக 1ஆம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் உள்ள பாதையைதான் கேட்கிறேன் என்றால் சரிதான்.

6. நான் தாக்கல் செய்த பிராது சொத்து விபரத்தில் 1 ஆம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1ஆன 1985 பாகப்பிரிவினையில் ஏ ஜாபிதா 2 லக்க சொத்தான சர்வே எண்.62ல் உள்ள பாதையை வழக்குச் சொத்து விபரமாகவே கொடுக்கவில்லை என்றாலும் எனது தகப்பனாருக்கு பி ஜாபிதாவாக ஒதுக்கப்பட்ட சர்வே எண்.62க்கு சம்பந்தப்பட்ட நிலத்தைத் தான் பிராது சொத்து விபரமாக குறிப்பிட்டு பாதை கேட்டுள்ளேன் என்றாலும் அதனால் வழக்கு செல்லத்தக்கதில்லை என்றும், எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் இவ்வழக்கு தள்ளுபடி

செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. சர்வே எண்.62ல் உள்ள தடத்திற்குத் தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.02.17 16:30:22 +0530

District Munsif,
Palani.